**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.39/2024**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு மார்ச் மாதம் 03 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பொன்னுசாமி | மதம் | : இந்து |
| த/பெ | : நடராஜன் | ஜாதி | : -- |
| வயது | : 55 | கிராமம் | : மணவூர் |
| தொழில் | : வழக்கறிஞர் | வட்டம் | : திருத்தணி |

**03.03.2026**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிக் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கில் உள்ள மற்ற வாதிகள் எனக்கு என்ன உறவு என்றால் 1ம் வாதி முனியம்மாள் தாயார் ஆவார். 2 முதல் 5 வாதிகள் எனது உடன் பிறந்தவர்கள் ஆவார்கள். 1 முதல் 4 பிரதிவாதிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்களா என்றால் ஆமாம். பிரதிவாதிகள் மீது என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். பிரதிவாதிகள் தனிப்பட்ட முறையில் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்களா என்றால் கோவிலை எங்கள் மனையில் தள்ளி கட்டியுள்ளார்கள். அது என்ன கோவில் என்றால் பட்டாபிராமர் பஜனை கோவில் ஆகும். அந்த கோவிலில் என்ன படம் வைத்துள்ளார்கள் என்றால் பெருமாள் படம் வைத்து வணங்குகிறார்கள். அங்கு ஏற்கனவே கோவில் இருந்ததா என்றால் இருந்தது. எத்தனை வருடங்களுக்கு முன்பு கோவில் அங்கு கட்டப்பட்டது என்றால் 30 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டதாகும். முன்பு சின்னதாக இருந்தது.

2. தனிப்பட்ட முறையில் பிரதிவாதிகள் கோவிலை கட்டவில்லை என்றால் சரிதான். அது எந்த எந்த ஊருக்கு சொந்தமான கோவில் என்றால் மணவூர் மற்றும் காபுல் கண்டிகை ஆகிய ஊர்களுக்கு சொந்தமானதாகும்.

பிரதிவாதிகளுக்கு கோவிலில் தனிப்பட்ட உரிமை உள்ளதா பொது கோவிலா என்றால் பொது கோவில்தான். கோவில் சார்பாக தர்மகர்த்தா, டிரஸ்டீ ஆகிய பதவிகளில் பிரதிவாதிகள் இல்லை என்றால் ஸ்ரீதர் மட்டும் பூசாரியாக உள்ளார். கோவிலில் ஸ்ரீதருக்கும் தனிப்பட்ட உரிமை இல்லை என்றால் தனிப்பட்ட உரிமை இல்லை. நான் இந்த வழக்கில் பட்டாபிராமர் பஜனை கோவிலை பிரதிவாதியாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. அதற்காகதான் அந்த நான்கு பேரை வழக்கில் சேர்த்துள்ளேன். பிரதிவாதிகளுக்கு இந்த வழக்கு சொத்தில் தனிப்பட்ட உரிமை இல்லாத நிலையில் அவர்கள் பிரதிவாதிகளாக சேர்த்தது தவறு என்றால் சரியல்ல.

3. ஊரில் உள்ள நபர்களை கோவிலுக்கான பிரதிநிதிகள் ஸ்தானத்தில் சேர்த்து உரிமையியல் நடைமுறைசட்டம் கட்டளை 1 விதி 8ன் கீழ் அனுமதி பெற்றுதான் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் அவர்கள்தான் கோவில் பணிகளை முன்னின்று செய்வதால் அவர்கள் மீது இந்த வழக்கை தாக்கல் செய்தேன். தாவா சொத்து என்ன வகைப்பாடு என்றால் கிராம நத்தம் ஆகும். வருவாய் ஆவணங்களில் வழக்கு சொத்து என்னவாக வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றால் கிராம நத்தம் புறம்போக்காகும். வழக்கு சொத்தின் புல எண் என்ன என்றால் புல எண்.270/1 ஆகும். பழைய எண்.80/2 ஆகும். அதன் கிழமேல் தென்வடல் அளவு சொல்ல முடியுமா என்றால் கிழமேல் வடக்கு பக்கம் 210 அடி ஆகும். **(சாட்சி தற்போது பின்வருமாறு மாற்றி கூறுகிறார்)** தெற்கு பக்கம் 210 அடி, வடக்கு பக்கம் 207 அடி ஆகும். வழக்கு சொத்தின் தென்வடல் கிழக்கு பக்கம் 23 அடி 7 மீட்டர் ஆகும். மேற்கு பக்கம் சாலையில் இருந்து வழக்கு சொத்திற்கு உள்ளே நுழையும் இடத்திற்கு 1 மீட்டர் அகலம் 12 அடி நீளம்.

4. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு தாவா சொத்து காலி இடமா என்றால் என் அப்பா மாடுகள் கட்டி அனுபவித்து வந்தார். என் அப்பா மாடு கட்டி தாவா சொத்தை அனுபவித்து வந்தார் என்பதை நான் வாதுரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு

சொல்லவில்லை என்றாலும் வழக்கு சொத்து என் அனுபவத்திலேயே இல்லை என்றாலும் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)